MC.23/2024

21.08.2025

PW1 – காயத்ரி க/பெ.விக்னேஷ்குமார், வயது–33

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.48 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 01.10 P.M.

Solemnly affirmed **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** in accordance with the provision of Act X of 1873 of the day of 21.08.2025.

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

குறுக்கு விசாரணைதொடர்ச்சி:-

ஜீவனாம்ச தொகை எந்தெந்த தலைப்பில் எவ்வளவு தேவை என்று நீங்கள் சொல்லவில்லை என்றால் எதிர்மனுதாரர் என் கணவர் என் தேவைகளை பூர்த்தி செய்வது அவர் கடமையாகும். இவ்வழக்கில் உங்கள் கணவர் தாக்கல் செய்த பதில் உரையில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் இடையே தாம்பத்திய உறவு இல்லை எனவும் உங்களுடைய பெற்றோர்கள் அவரை ஏமாற்றி உங்களை திருமணம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் தவறு. உங்களுக்கும் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று மேட்டுப்பாளையம் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.97/2024 தாக்கல் செய்யப்பட்ட காரணத்தினால் ஜீவனாம்சம் கோருவதற்கு நீங்கள் அருகதையற்றவர் என்று எதிருரையில் உங்கள் கணவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் தவறான சங்கதி. HMOP.No.97/2024 என்ற வழக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் Tr.CMP.No.1346/2024, 10.06.2025 உத்தரவின் படி திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றலாகி வந்துவிட்டது என்பதை

தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். திருப்பத்தூரிலிருந்து உங்கள் கணவர் வீட்டிற்கு எவ்வளவு தூரம் என்றால் 350 கி.மீ தூரம் கூடுதலாக இருக்கும். உங்களை பெண் பார்க்க வரும்போது நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளும் நபர் உங்கள் வீட்டிலிருந்து 10 கி.மீ தூரம் தான் இருக்கவேண்டும் என்று உங்கள் பெற்றோரிடம் சொன்னீர்களா என்றால் நான் சொல்லிய சூழ்நிலை வேறு. பின்னர் விசாரிக்கும்போது அந்த சூழல் குறித்து சொல்கிறேன். தற்போது அதற்கான காரணத்தை சொல்லுங்கள் என்றால் 10 கி.மீ தூரத்தில் இருந்தால் அருகாமையில் இருக்கும் மக்களின் பழக்கவழக்கங்கள் தெரியும் என்ற காரணத்தினால் தான் சொன்னேன். நான் சொன்னதை அவர்கள் தவறாக புரிந்துகொண்டார்கள். உங்களை பெண் பார்த்து நிச்சயதார்த்தம் செய்து அதன் பின்னர் தான் திருமணமா என்றால் எங்களுக்கு ஒப்பு தாம்பூலம் தான் நடந்தது நிச்சயதார்த்தம் திருமணத்திற்கு முந்தைய நாள் தான் நடந்தது. ஆகஸ்டு 17 என்னை பெண் பார்க்க வந்தார்கள். 10 நாட்கள் கழித்து அவர்கள் உறவினர்களுடன் வீட்டிற்கு வந்து என்னை பிடித்துவிட்டது என்று சொன்னார்கள். அதன் பிறகு ஒப்புத்தாம்பூலம் அதன் பிறகு திருமணம். அனைத்திற்கும் என்னுடைய சம்மதம் கேட்கவில்லை. ஒப்புத்தாம்பூலத்திற்கு பிறகாவது உங்கள் கணவரிடம் நீங்கள் அழைப்பேசியில் பேசினீர்களா என்றால் நான் அவருடைய அழைபேசி எண்ணை தொடர்புகொண்ட போதெல்லாம் திருமண வேலை இருப்பதாக சொல்லி என்னிடம் ஒரு நிமிடத்திற்குள் அழைபேசியை துண்டித்துவிடுவார். திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு இரண்டு முறை அழைப்பேசியில் குறுஞ்செய்தி அனுப்பினார். உங்களுடைய தாயார் உங்களுடைய அழைபேசி எண்ணை உங்கள் கணவருக்கு கொடுக்கவில்லை எனவும் திருமணத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு தான் உங்கள் அழைபேசி எண்ணை கொடுத்தார்கள் என்றால் தவறு. நானே சென்று என்னுடைய அழைபேசி எண்ணை என் கணவருக்கு கொடுத்தேன். உங்களுடைய தாயார் உங்களுடைய அழைபேசி எண்ணை உங்கள் கணவருக்கு கொடுக்காத காரணம் உங்களுக்கு உலக அறிவு குறைவு என்ற காணரத்தினாலும் குழந்தை தனம் மிகுதியாக இருந்த காரணமும் எதிர்மனுதாரருக்கு தெரியவரும் என்ற காரணத்தினால் தான் என்றால் தவறு.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.08.21 15:55:11 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.